**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 96/2021**
**நாள் 04/07/2025 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 3–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ராணி | க/பெயர் – ஏழுமலை |
| வயது – 55 | தொழில் – |
| விலாசம் – தேவந்தம்மன் நகர், பொன்னேரி | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்கை மகேசும் லத்தாவும் தங்க பிரகாசுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாது. விஸ்தீரணம் தெரியாது. வழக்கு சொத்தின் நான்கு எல்லை விவரம் தெரியாது. வழக்கு சொத்திற்கான பட்டா யாா் பெயரில் உள்ளது என்றால் முனியம்மாள் பெயரில் உள்ளது. முனியாம்மாள் எனக்கு தங்கை உறவு முறையாவார். இவ்வழக்கில் சாட்சியம் அளித்த ஜெயா எனது உடன்பிறந்த சகோதரி ஆவார். ஜெயா மற்றும் எனக்கு பிரதிவாதியிடம் சிறிய வயதில் இருந்து பேச்சுவார்த்தை இல்லை. இவ்வழக்கின் 2ம் வாதியிடம் தான் நானும் ஜெயாவும் மிக நெருக்கமாக இருப்போம். அதனால் தான் நான் மகேசுக்கு சாதகமாக சாட்சியளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான், உண்மையை தான் சொல்ல வந்தேன். நான் பிறந்த ஊர் தேர்வழி கிராமம் ஆகும். எனக்கு திருமணம் ஆகும் வரை தேர்வழி கிராமத்தில் தான் இருந்தேன் என்றால் சரிதான்.

எனக்கு திருமணம் ஆகி சுமார் 45 வருடங்கள் ஆகிறது. திருமணம் நடந்து 45 ஆண்டுகளாக பொன்னேரி தேவாத்தம்மன் நகரில் தான் வசித்து வருகிறேன். அதே போல் எனது தங்கை ஜெயா திருமணத்திற்கு பிறகு தான் பரணம்பேடு கிராமத்தில் வசித்து வருகிறார். தங்கபிரகாசு தற்போது மகேஸ் வீட்டில் தான் வசிக்கிறார். மகேஸ் குடும்பமும் தங்கபிரகாசு குடும்பமும் ஒரே வீட்டில் தான் குடியுள்ளார்களா என்றால் பக்கத்து பக்கத்து வீட்டில் குடியுள்ளனர். மேற்படி இருவர் குடும்பத்திற்கும் தனித்தனி வாசற்படி உள்ளது. எனது வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞர் படித்து சொன்னார். அதில் உள்ள விவரங்கள் சரி என்று ஒப்புக்கொண்டு தான் நான் கையொப்பம் செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் நான் 40 ஆண்டுகளாக பரணம்பேடு கிராமத்தில் வசித்துவருவதாக கூறியுள்ளேன் என்றும் தற்போது சாட்சியத்தில் தேவத்தம்மன் நகரில் வசித்து வருவதாக கூறியுள்ளேன் இதில் எது சரி என்றால் பொன்னேரி தேவத்தம்மன் நகரில் வசிப்பது தான் உண்மை. எனது தங்கை ஜெயா கையொப்பம் போடுவாரா இல்லை கைரேகை வைப்பாரா என்றால் அவருக்கு தான் தொியும் எனக்கு தெரியாது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் பரணம்பேட்டில் பிறந்தாக கூறியுள்ளது பொய் என்றால் சரிதான். நான் பிறந்தது தேர்வழி கிராமம் ஆகும். எனக்கு வழக்கு பற்றியும் வழக்கு சொத்தை பற்றியும் எந்த விவரமும் தெரியாது என்றும் பிரதிவாதியின் மீது உள்ள கோவத்தினால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**